**குளித்தலை நகராட்சி**

*2023ஆம் வருடம் ஜுலை மாதம் 31.ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 10.30 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

--------

| | |
|---|---|
| பொருள்-01. | குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் வந்து செல்லும் வழியின் குறுகலான மையப்பகுதியில் காந்திசிலை உள்ளது. இதனால் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் பேருந்து நிலையைத்திற்குள் வந்து செல்வதற்கு குறுகிய இடத்தினை கடக்க மிகவும் சிரமமாக உள்ளபடியால், போக்குவரத்திற்கும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் உள்ள சிரமமான சூழலை கருதி, காந்தி சிலையினை அருகாமையில் உள்ள வேறு இடத்தில் மாற்றி அமைப்பது தொடர்பாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அதன்பேரில், வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ஒ.மு.அ3/4500/2023 எண்ணிட்ட 19.07.2023ஆம் தேதிய குறிப்பாணையில், நகர்மன்ற தீர்மானம் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள காந்திசிலையினை அகற்றி, பேருந்து நிலையத்தில் உயர்கோபுர மின் விளக்கு அமைந்துள்ள இடத்திலோ அல்லது, சுங்ககேட் ரவுண்டானா உயர்கோபுர மின் விளக்கு அமைந்துள்ள இடத்திலோ அல்லது வேறு மாற்று இடத்திலோ மாற்றியமைக்கவும் மற்றும் காந்தி சிலையினை சுற்றி உள்ள சுற்றுச்சுவருக்கு வெளியே, போக்குவரத்திற்கு மற்றும் வாகன பார்வைக்கு மறைக்கும்படியாக நிறுவப்பட்டுள்ள அனைத்து கட்சிகளின் கொடிக்கம்பங்கள் மற்றும் இதர சங்கங்களின் கொடிக்கம்பங்களை அகற்றவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு- மன்றம் முடிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.672/2022/பி2) |

*******

**குளித்தலை நகராட்சி**

**குளித்தலை நகர்மன்றத்தின் 31.07.2023ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானத்தின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 182 | காந்திசிலை மற்றும் அதை சுற்றியுள்ள கொடி கம்பங்களை அகற்ற மன்றம் முடிவு செய்யப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல்/

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.